செய்தி வெளியீட்டு எண்.952 நாள்: 9.12.2009

## செய்தி வெளியீடு

### தமிழகச் சுற்றுலாவின் 2010ஆம் ஆண்டிற்கான வண்ணமயமான நாட்காட்டியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள்.

தமிழகச் சுற்றுலாத் துறை தனியார் பங்களிப்புடன் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் வண்ணமயமான நாட்காட்டியினை வெளியிட்டு வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு கருப்பொருளை மையமாக வைத்துத் தமிழகச் சுற்றுலாத் தலங்களை உலகறியச் செய்யும் நோக்கத்துடன் இந்நாட்காட்டி வெளியிடப்படுகிறது.

முதலாவது ஆண்டு (2007) தமிழகத்தின் அழகிய சுற்றுலாத் தலங்களையும் (Tourist Spots), இரண்டாம் ஆண்டு (2008) தமிழகத்தில் அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களையும் (Less known Tourist spots), மூன்றாம் ஆண்டு (2009) தமிழகத்தின் இயற்கை வளங்களையும் (Natural Splendours), நாட்காட்டியாகக் கொண்டு வந்தது.

தமிழ்நாடு என்றால் உயர்ந்த கோபுரங்களுக்குச் சொந்தமான மாநிலம் என்கின்ற எண்ணம் மற்ற மாநிலங்களிலும், இதர நாடுகளிலும் பரவியிருக்கிறது. இங்கே இருக்கின்ற இயற்கை வளங்கள் குறித்தும், பசுமை படர்ந்த எழில்வாய்ந்த மலைச்சாரல்கள் குறித்தும் அதிகம் தெரியாமல் இருப்பதைக் கருத்தில்கொண்டு, அதனை மாற்றும் முயற்சியாக அப்படிப்பட்ட சுற்றுலாத் தலங்களை நாட்காட்டியாகக் காட்சிப்படுத்தும் வகையில், 2010 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியில் தமிழகத்தில் உள்ள 12 மலைச்சாரல்களைக் (Pleasant Splendours) கருப்பொருளாகக் கொண்டு நாட்காட்டி வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

அந்த நாட்காட்டியில் ஊட்டி, கொடைக்கானல், ஏலகிரி, ஏற்காடு, கொல்லிமலை, பொதிகை மலை, ஜவ்வாது மலை, ஆனைமலை, வால்பாறை, மேகமலை, டாப்சிலிப், கல்ராயன்மலை ஆகிய மலைச்சாரல்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழகத்தின் வனப்புமிகு மலைச்சாரல்களை கருப்பொருளாகக் கொண்டு தமிழக சுற்றுலாத் துறையினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வண்ணமயமான நாட்காட்டியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (09.12.2009) தலைமைச்செயலகத்தில் வெளியிட்டார்கள். அந்நாட்காட்டியினை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, கவிஞர் கனிமொழி, எம்.பி. சுற்றுலா–பண்பாட்டுத் துறைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலா இயக்குநர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரு.ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப. ஆகியோர் இந்நிகழ்வின்போது உடனிருந்தார்கள்.

இந்த நாட்காட்டி தமிழகத்திலுள்ள முக்கியமான சுற்றுலா விடுதிகளுக்கும், வெளி மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். இந்தியாவில் தமிழகம் மட்டுமே சுற்றுலாத் துறையின் மூலம் இதுபோன்றதொரு நாட்காட்டியினை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்
செயலகம், சென்னை–9.